00045

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பள்ளிக் கல்வி உயர் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் 2018/2019
இறுதிப் பரீட்சை – 2020
EPC2815/EPA2815/EPE2815/ESE2815 – முன்பிள்ளை விருத்தி

பகுதி – I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி – II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 18.07.2020 நேரம்: மு.ப: 09.30 பி.பி.12.30

## பகுதி – I

1. **'தலை முதல் கால்'** வரையான உடல் விருத்தி பற்றிய ஒரு கொள்கையை விளக்குக.

2. **'முதிர்ச்சி'** என்றால் என்ன ?

3. i. **'கர்ப்ப காலத்தில்'** விருத்தியை பாதிக்கும் காரணிகள் மூன்றினை (3) பெயரிடுக.

   ii. மேற்குறிப்பிட்ட காரணிகளில் கர்ப்பகாலத்தின் விருத்தியை எதிர்மறையாக பாதிக்கும் ஒரு காரணி பற்றி விளக்குக.

4. **'குறியீட்டு சிந்தனை'** என்ற எண்ணக்கருவை உதாரணங்கள் மூலம் விளக்குக.

5. **'கற்றலின் ஆயத்த நிலை'** எவ்வாறு பிள்ளைகளின் செயற்பாடுகளில் செல்வாக்கு செலுத்துகின்றதென்பதை பொருத்தமான உதாரணங்கள் மூலம் விளக்குக.

6. முன்பள்ளிப் பிள்ளைகளிடம் காணப்படக்கூடிய **'சமூகவிரோத நடத்தைக் கோலங்கள்'** நான்கினைப் (4) பெயரிடுக.

7. i. முன்பள்ளி வயதுடைய பிள்ளைகளின் **'மனவெழுச்சிகள்'** நான்கினைப் (4) பெயரிடுக.

   ii. மேற்குறிப்பிட்ட மனவெழுச்சிகளில் ஒன்றைப் பற்றி விளக்கு.

8. முன்பள்ளிப் பிள்ளைகளிடம் **'உடல் அளவு வேறுபாட்டை'** பாதிக்கும் காரணிகள் ஐந்தினை (5) விளக்குக.

**(8 x 5 = 40புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. **'பிள்ளை நடத்தை'** பற்றிக் கற்கும் நுட்பங்கள் நான்கினை (4) பெயரிடுக.

**(4 புள்ளிகள்)**

ii. மேற்குறிப்பிட்ட நுட்பங்களில் ஏதாவது ஒன்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

**(7 புள்ளிகள்)**

iii. சிசுவினுடைய (புதிதாக பிறந்த பிள்ளை) உடற்தேவைகள் ஐந்தினை (5) பெயரிட்டு அவற்றில் மூன்றினை (3) சுருக்கமாக விளக்குக.

**(9 புள்ளிகள்)**

10. i. அடிப்படை விருத்தி எண்ணக்கருவுக்கமைய இளம் பிள்ளைகளின் **'முழுவிருத்தியை'** பெயரிடுக.

**(10 புள்ளிகள்)**

ii. முன்பள்ளிப் பிள்ளைகளில் **'அறிகைப்புலன் விருத்தியை'** ஏற்படுத்துவதற்கு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறான தலையீட்டை ஏற்படுத்த முடியுமென்பதை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. i. **'பேரியக்கத்திறன்'** என்றால் என்ன? உதாரணங்கள் மூலம் விளக்குக.

**(4 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளிடத்தில் பேரியக்கத்திறன்களில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு (2) காரணிகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குக.

**(6 புள்ளிகள்)**

iii. பிள்ளைகளிடத்தில் நுண்ணியக்கத்திறன்களை விருத்தி செய்வதற்கு முன்பள்ளி ஆசிரியர்களால் ஏற்பாடு செய்யக்கூடிய ஐந்து (5) செயற்பாடுகளை சுருக்கமாக விளக்குக.

**(10 புள்ளிகள்)**

12. i. முன்பள்ளி பிள்ளைகளிடத்தில் காணப்படக்கூடிய **'நல்ல சமூக நடத்தை முறைகள்'** ஐந்தினை (5) பெயரிடுக.

**(5 புள்ளிகள்)**

ii. மேற்குறித்த நடத்தைகள் கொண்ட முன்பள்ளி பிள்ளைகள் வகுப்பறையில் காணப்படும்போது அவதானிக்கக்கூடிய நல்ல பண்புகளை எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்குக.

**(7 புள்ளிகள்)**

iii. முன்பள்ளி பிள்ளைகளில் **'சமூக நடத்தை முறை'** உருவாக்கலில் முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதை தர்க்கரீதியாக விளக்குக.

**(8 புள்ளிகள்)**

13. i. பிள்ளைகளின் மொழி விருத்தியை பாதிக்கும் ஐந்து (5) சூழல் காரணிகளை பெயரிடுக.

**(5 புள்ளிகள்)**

ii. இளம் பிள்ளைகளின் மொழி விருத்தியில் குடும்பத்தின் செல்வாக்கினை விளக்குக.

**(8 புள்ளிகள்)**

iii. பிள்ளைகளின் நேர்மறையான உணர்ச்சிகளின் விருத்தியில் தாயின் பங்கினை விளக்குக.

**(7 புள்ளிகள்)**

**பதிப்புரிமை பெற்றது**